**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 171/2021 |
| Name | : Rajaganesh |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**26.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**சாட்சி Micro soft teams செயலி வாயிலாக ஆஜரான பின்பு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாநகர மதுவிலக்கு அமலாக்க பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.09.2019 ம் தேதி நான் மடத்துக்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 12.00 மணிக்கு தலைமை காவலர் ராஜேந்திரன் மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 197/2019 இதச பிரிவுகள் 279, 337 ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்குக் கோப்பை பெற்று எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.09.2019 ம் தேதி 12.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஷேக் தாவூத் மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கு சம்மந்தப்பட்ட TN 40 W 0009 Innova கார் மற்றும் TN 94 A 3364 TVS இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளரை

விசாரணை செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். இவ்வழக்கின் எதிரியை கைது செய்து விசாரித்து 41(A) நோட்டீஸ் வழங்கி நிலைய பிணையில் விடுவித்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சை அளித்த பிரணவ் ஆர்த்தோ கேர் மருத்துவமனை மருத்துவர் கணேசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்று பெற்றேன். இவ்வழக்கில் வாதிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 279, 337 ல் இருந்து இதச பிரிவுகள் 279, 338 ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் விசாரணை முடித்து 17.10.2019 ம் தேதி எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்று வழக்குக் கோப்பில் எங்கும் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ரத்தக் கறையோ உடைந்த பாகங்களோ இருந்ததாக எனது விசாரணையில் தெரியவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும், பெட்ரோல் பங்கிற்கும் எவ்வளவு தூரம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரிலும், எனது விசாரணையிலும் வாதி பெட்ரோல் அடிப்பதற்காக திரும்பிய போது விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இரண்டு சக்கர வாகனத்தில் செல்லும் நபர்கள் கிழமேல் பாதையில் தென்புறமாக சென்று பங்கிற்கும் எதிராக திரும்புவது தான் சரியான பாதை என்றால் சரிதான் வாதி சரியான திசையில் தான் சென்றுள்ளார். சம்பவ இடம் தவறாக காட்டப்பட்டுள்ளது என்றும்,அந்த இடத்தில் வாதி பெட்ரோல் பங்கிற்கும் திரும்ப அவசியமில்லை என்றால் சரியல்ல.

(2) சம்பவ இடத்தில் இருந்து பெட்ரோல் பங்க் 200 அடிக்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல சுமார் 130 அடி இருக்கும். தூரத்தை ஏன் குறிப்பிடவில்லை என்றால் காரணம் எதுவும் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லாத காரணத்தினால் தான் தூரத்தை சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் காட்டியுள்ள சம்பவ இடத்தின் படி வாதி பெட்ரோல் பங்கை நோக்கி வலது புறம் திரும்பிய போது விபத்து

ஏற்பட்டிருந்தால் எதிரி வாகனத்தின் வலது புறம் தான் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எதிரி வாகனம் வலது புறம் திருப்பி விபத்து ஏற்பட்டது. எதிரி வாகனம் வலது புறம் திருப்பி விபத்து ஏற்பட்டது என்று வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

(3) எதிரி வாகனத்தின் முன் இடது பக்கம் தான் சேதம் ஏற்பட்டுள்ளதாக மோட்டார் வாகன ஆய்வாளர் சான்றளித்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு கோப்பில் கண்டுள்ளவாறு விபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது விசாரணையில் சந்திரசேகரன் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் தங்களுடன் வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சந்திரசேகரன் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரை சம்பவம் நடந்த மறு நாள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். வாதிக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மடத்துக்குளம் அரசு மருத்துவமனை மருத்துவரை நான் விசாரிக்கவில்லை மற்றும் சாட்சியாக போடவில்லை என்றால் சரிதான். மடத்துக்குளம் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரித்திருந்தால் காயம்பட்டவர் அந்த சமயத்தில் மது அருந்தியிருந்தாரா யாரால் மருத்துவமனைக்கு அழைத்த வரப்பட்டார் மற்றும் சுயநினைவுடன் இருந்தாரா என்று தெரிந்திருக்கும் என்றால் சரிதான்.

(4) வாதிக்கு சிகிச்சை அளித்ததாக சொல்லும் மருத்துவர் கொடுத்த சான்றிதல் இரண்டு இருசக்கர வாகனங்கள் உள்ளடக்கிய சாலை விபத்து என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி ஓட்டி வந்ததாக சொல்லும் இருசக்கர வாகனத்திற்கு இடது மற்றும் வலது பின் புறம் தான் சேதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி தான் கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் போது பின்புறம் வரும் வாகனங்களை கவனிக்காமல் பெட்ரோல் பங்கிற்கு வலது புறம் திரும்பு முற்படும் போது அவருக்கு பின்னால் வந்த எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் முன் இடது புறத்தில் பட்டு இடது புறமாக வண்டியுடன் கீழே விழுந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் வாதியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும் இந்த

வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெற வேண்டும் என்று கொடுக்கப்பட்ட பொய்யான புகார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.26 16:57:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்